கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்

மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

**MCOP No.140/2018** 03.07.2025 ம.சா.2

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | தொழில் |
| த/பெ | நாச்சிமுத்து | கிராமம் |
| வயது | | தாலுகா |
| ஜாதி | | மாவட்டம் |
| சமயம் | | |

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி. பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த மனுவின் மனுதாரர்கள் எனக்கு தெரிந்தவர்கள். விபத்து குறித்து நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதை காட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களில் என்னை சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்த போனவரின் தொழில் மற்றும் வருமானம் தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மேற்படி சங்கதிகளை முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை பார்க்கவில்லை என்றாலும் மனதாரர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பார்த்ததாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.07.04 19:19:44 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.